# தூய பிரிட்டோ கல்லூரி ,ஆதம்பாக்கம் ,சென்னை -88

## பேராசிரியர்கள் கலந்துரையாடல் நிகழ்வு (FDP )

நமது கல்லூரியில் பேராசிரியர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு கல்லூரி முதல்வர் திரு.தாமஸ் பொன்ராஜ் அவர்களின் நெறியாள்கையில் கல்வித்திட்ட ஒருங்கிணைப்பாளரும் ,பேராசிரியர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு ஒருங்கிணைப்பாளருமான திருமதி .நளினி அவர்களின் மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.அதன் தொடர் நிகழ்வாக 5.8.16 இல் முனைவர் .சு.சதீஸ்வரன் அவர்களால் "இலக்கியம் " என்னும் தலைப்பில் கலந்துரையாடல் தொடங்கியது .நிகழ்வின் முதல் பகுதியாக சதீஸ்வரன் தயாரித்து வைத்திருந்த வினாப்பட்டியல் பேராசிரியர்களுக்கு வழங்கப்பட்டது .அதில் காணப்பட்ட கேள்விகள் விவரம் வருமாறு:

1.உங்களது பார்வையில் .இலக்கியம் என்றால் என்ன ?

2.தமிழ் இலக்கியம் குறித்த உங்களது கருத்துக்கள் கூறுக

3.வேற்று துறை பேராசிரியர்களுக்கு இலக்கிய அறிவு அவசியமா?

4.இலக்கியம் உங்களை ஒரு ஆளுமையாக மாற்றும் என்பதில் நம்பிக்கை இருக்கிறதா ?

இக்கேள்விகளை முன்வைத்து நடந்த கலந்துரையாடலில் அனைவரும் பங்கெடுத்து கொண்டனர்.அதிலும் குறிப்பாக செல்வி .திவ்யா ,திருமதி .சந்திரா,திருமதி.அபிநந்தனா,முனைவர்.சரண் ,பேராசிரியர்.பெர்னார்ட் அவர்களின் பங்களிப்பு,மொழி,இலக்கியம் ஆகியவை பண்பாடு,கலாச்சாரக்கூறுகளை தாண்டி ஒரு மனிதன் ஆளுமை வளச்சிக்கு எத்துணை உதவி புரியும் என்பதை அவர்களின் வாழ்வியல் அனுபவங்களோடு இணைத்து கூறிய விதம் நிகழ்வை அடுத்த தளத்திற்கு எடுத்த்து சென்றது .முத்தாய்ப்பாக முதல்வர் அவர்கள் "இலக்கியம் கண்டிப்பாக ஆளுமை வளர்ச்சிக்கு உதவும் என்றும் ,பேராசிரியர்களுக்கு பல்வேறுவிதமான வகையில் துணை புரியும்.அதன் மூலம் வகுப்பில் மாணவர்களை கையாளும் திறனை பெறலாம் "எனக்கூறி நிகழ்வினை முடித்து வைத்தார் .பல்வேறு காரசாரமான விவாதங்களோடும் ,எடுத்துக்

கொண்ட மையபொருளில் இருந்து விலகாமல் "இலக்கியம் "என்னும் இக்கலந்துரையாடல் இனிதே முடிவு பெற்றது .





